# சட்டம்-ஒழுங்கை உறுதி செய்ய வேண்டும்

## காவல் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு






சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநில சட்டம்- ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம். உடன் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா, தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூலை 11:** மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், தமிழகத்தில் மக்களைப் பாதிக்கும் எந்தவொரு சட்டம்-ஒழுங்கு பிரச்னையும் ஏற்படாத வகையில் உறுதி செய்ய வேண்டும் என்று காவல் துறையினருக்கும், அதிகாரிகளுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக்கூட்டத்துக்குத்தலைமை வகித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதில் காவல் துறையும், அரசின் அனைத்துத் துறைச் செயலர்களும் முழுமையான ஒத்துழைப்பு அளித்து பணியாற்ற வேண்டும். ஓர் அரசு நல்லரசாகச் செயல்படுவதற்கு சட்டம்- ஒழுங்கு முறையாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணம், சட்டம்-ஒழுங்குக்கு கொடுத்து வரும் முக்கியத்துவம் தான். சட்டம் ஒழுங்கை முறையாக கடைப்பிடித்து வருகிறோம் என்பதன் அடையாளம்தான் கடந்த இரு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டங்களாகும்.

**நெருங்கும் மக்களவைத் தேர்தல்:** நிம்மதியும் அமைதியும் இருக்கும் மாநிலத்தில்தான் நினைத்த திட்டங்களைச் செயல்படுத்த முடியும். அந்த வகையில், இரண்டாண்டு காலம், மிக மிக நிறைவான காலமாக அமைந்துள்ளது. காவல் துறையின் செயல்பாடுகள் மிக மிக திருப்திகரமாக உள்ளது. அடுத்து வரும் ஓராண்டு காலம் மிக முக்கியமானதாகும்.

இந்தக் காலத்தில் காவல் துறையின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, சட்டம்-ஒழுங்கு பிரச்னைகள் கண்டறியப்பட்டவுடன், அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவை மக்களுக்கு பிரச்னைகளை ஏற்படுத்தும் வகையில் பெரிய நிகழ்வுகளாக மாறுவதைத் தவிர்க்க வேண்டும்.

மக்களைப் பாதிக்கும் எந்தவொரு சட்டம்- ஒழுங்கு பிரச்னையும் அடுத்த ஓராண்டு காலத்துக்கு ஏற்படாத வகையில் உறுதி செய்ய வேண்டும். மக்களவைத் தேர்தல் வர இருப்பதால், மிக மிக எச்சரிக்கையுடன் காவல் துறை அதிகாரிகள் செயல்பட வேண்டும்.

மக்களிடம் இருந்து பெறக்கூடிய புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது நடுநிலை தவறாமல் இருக்க வேண்டும். புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விருப்பு வெறுப்பு இல்லாமல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் நிலையங்களில் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல், அங்கேயே பேசி முடித்துக்கொள்வதை அறவே தவிர்க்க வேண்டும்.

**போதை மருந்து:** போதை மருந்து நடமாட்டத்தை முற்றிலும் தடை செய்ய வேண்டும். போதை என்பது அதைப் பயன்படுத்தும் தனிமனிதரின் பிரச்னை இல்லை; அது சமூகப் பிரச்னை. போதை என்பதை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும். இதன்மூலம் சமூகத்தில் குற்றங்களைத் தடுக்க முடியும்.

கொலை, கொள்ளை, பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்கு போதைப் பொருள்கள்தான் தூண்டுதலாக அமைகின்றன.

இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் போதை மருந்துகளைப் பயன்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் தங்களது மாவட்டத்துக்குள் போதைப் பொருள் விற்பனையை முற்றிலுமாகத் தடை செய்துவிட்டோம் என்று மார்தட்டிச் சொல்லும் அளவுக்கு கட்டுப்படுத்த வேண்டும்.

**சமூக வலைதளங்கள்:** ஜாதி,மத ரீதியான மோதல்களைத் தடுப்பது ஒருபுறம் என்றால், அவற்றை சமூக வலைதளங்களின் மூலமாக பரப்புவோர் அதிகமாகி வருகிறார்கள்; அவர்களைக் கண்காணிக்க வேண்டும். அவர்கள்தான் சமூக அமைதியைக் கெடுக்கக் காரணமாக இருக்கிறார்கள். அவர்களால் அப்பாவிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், சொகுசாக அமர்ந்து கொண்டு ஜாதி, மத ரீதியான வன்மங்களை விதைப்பவர்கள் தப்பிவிடுகிறார்கள். இத்தகைய நச்சுக் கருத்துகளைப் பரப்புவோரைக் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு காவல் துறை என்பது நடந்த குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துறையாக மட்டுமல்லாமல்,குற்றங்கள் நிகழாமல் தடுக்கும் துறையாகவும் செயல்பட வேண்டும்.

இந்த அறிவுரைகள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுவதை உள்துறைச் செயலரும், காவல் துறை தலைமை இயக்குநரும் உறுதி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் அனைத்துக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையர்களுடன் இணைய வழியே ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி அனைத்து அறிவுரைகளும் முழுமையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

> தமிழ்நாடு காவல் துறை என்பது நடந்த குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துறையாக மட்டுமல்லாமல், குற்றங்கள் நிகழாமல் தடுக்கும் துறையாகவும் செயல்பட வேண்டும்.
> — முதல்வர் மு.க.ஸ்டாலின்

## 'காவல் மரணங்கள் நிகழக் கூடாது'

காவல் மரணங்கள் முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

குற்றம்சாட்டப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் விசாரிக்கப்படும்போது கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். அவர்களை எந்தவிதத்திலும் துன்புறுத்தக் கூடாது. காவல் மரணங்கள் முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் தமிழக அரசு எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. கல்விக் கூடங்கள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது தலையாய கடமையாகும்.

பொதுமக்கள் மற்றும் பெண்களிடம் இருந்து பெறப்படும் ஒவ்வொரு புகாரின் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தருவதை உறுதி செய்ய வேண்டும்.

**விழுப்புரம் – செங்கல்பட்டு:** கடந்த சில மாதங்களுக்கு முன்பாக, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளால் சில உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து, எனது அறிவுறுத்தலால் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளால் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் வெகுவாகக் குறைந்துள்ளன.

இந்தப் பிரச்னை குறித்து வாரந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்திக் கண்காணிக்க வேண்டும். மக்களிடம் இருந்து பெறக்கூடிய புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது நடுநிலைமை தவறாமல் இருக்க வேண்டும் என்றார் முதல்வர்.

# இணையவழி விளையாட்டுகளுக்கு 28% ஜிஎஸ்டி

## ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல்



**புது தில்லி, ஜூலை 11:** இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயங்கள், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றுக்கு பந்தய தொகையில் 28 சதவீத சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) விதிக்க ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

ஜிஎஸ்டி கவுன்சிலின் 50-ஆவது கூட்டம் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் மாநில நிதியமைச்சர்கள், மத்திய நிதியமைச்சக உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயங்கள், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றுக்கு அதிகபட்ச ஜிஎஸ்டி விகிதமான 28 சதவீதத்தை விதிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்த விளையாட்டுகளில் ஈடுபடுவோரின் பந்தய தொகையில் 28 சதவீதமானது ஜிஎஸ்டியாக வசூலிக்கப்படும். இணையவழி விளையாட்டுகளில் திறன் சார்ந்தவை, வாய்ப்பு சார்ந்தவை என்ற வேறுபாடு முற்றிலுமாகக் களையப்படுகிறது.

இணையவழி விளையாட்டுகளை ஜிஎஸ்டி சட்ட வரம்புக்குள் கொண்டுவருவதற்கான சட்டத் திருத்த மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படும்.

இணையவழி விளையாட்டுகளுக்கு ஜிஎஸ்டி விதிப்பது தொடர்பாகக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மத்திய தகவல்-தொழில்நுட்ப அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட ஜிஎஸ்டி கவுன்சில் முடிவெடுத்துள்ளது.

இணையவழி விளையாட்டுகளுக்கு ஜிஎஸ்டி விதிப்பது, அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவு. இந்த விவகாரத்தில், இணையவழி விளையாட்டுகளை வழங்கி வரும் நிறுவனங்களைக் குறிவைக்கும் வகையில் செயல்படவில்லை. கோவா, சிக்கிம் மாநில சுற்றுலாத் துறையில் கேசினோ முக்கியப் பங்கு வகித்து வருகிறது. அந்த மாநிலங்களின் கருத்தையும் கேட்ட பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 3 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த விவகாரத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

திரையரங்குகளில் விற்கப்படும் உணவுப் பொருள்களுக்கு 5 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்படும் என மத்திய நிதித்துறைச் செயலர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மருந்து விநியோக மேம்பாடு

# உலக சுகாதார அமைப்பு பயிலரங்கு சென்னையில் தொடக்கம்

**சென்னை, ஜூலை 11:** மருந்து, மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவது தொடர்பான உலக சுகாதார அமைப்பின் தென் கிழக்கு ஆசிய பிராந்திய பயிலரங்கு சென்னையில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 11) தொடங்கியது.

இம்முறை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் (டிஎன்எம்எஸ்சி) நிர்வாக நடவடிக்கைகளை நேரில் கள ஆய்வு செய்யும் வகையில் அந்த பயிலரங்கத்தின் நிரல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சென்னையில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்ற தொடக்க நிகழ்வில், நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள், மருத்துவப் பிரதிநிதிகள், உலக சுகாதார அமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக சுகாதார அமைப்பு பயிலரங்க தொடக்க விழாவில் பங்கேற்ற மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செயலர் ககன்தீப் சிங் பேடி, உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செயலர் ககன்தீப் சிங் பேடி, உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய சுகாதார இயக்குநர் மனோஜ் ஜலானி ஆகியோர் அதில் பங்கேற்று உரையாற்றினர். அதைத் தொடர்ந்து பல்வேறு தலைப்பிலான அமர்வுகளில் துறைசார் வல்லுநர்கள் உரையாற்றினர்.

வியாழக்கிழமை (ஜூலை 13) வரை நடைபெறவுள்ள இந்த பயிலரங்கில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் கீழ் உள்ள மருந்து கிடங்குகளின் செயல்பாடுகளை நேரில் கண்டறிவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடக்க நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

தரமான மருத்துவ சேவைக்கு மூன்று விஷயங்கள் முக்கியத் தூண்களாக உள்ளன. மருத்துவப் பணியாளர்கள், மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சரியான தருணத்தில் விநியோகிக்கப்படும் மருத்துவப் பொருள்கள் ஆகியவை மூலம்தான் சிறந்த மருத்துவத்தை அளிக்க முடியும்.

அந்த வகையில் மருத்துவப் பொருள்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கடந்த 1994-இல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் கீழ் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் விநியோகிக்கப்படுவதுடன் 16 கதிர் வீச்சு மையங்களும், 9 லீனியர் ஆக்ஸலரேட்டர் எனப்படும் நவீன கதிர் வீச்சு சிகிச்சை மையங்களும், 11 டெலி கோபால்ட் சிகிச்சை மையங்களும், 39 எம்ஆர்ஐ மற்றும் 119 சிடி ஸ்கேன் மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

மக்களின் நலன் காக்க மருத்துவக் காப்பீடு, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நல உதவி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் என பல திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

# குமரியொடு வட இமயத்து ஒரு மொழி!

தேனீ அற்புதமான பூச்சி. ஒரு கூட்டில் ஒரே ஒரு இராணித்தேனீ இருக்கும். அது நூற்றுக்கணக்கான முட்டைகள் இடும். அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளி வரும். அவற்றில் ஒரே ஒரு இராணித் தேனீ குஞ்சு இருக்கும். பருவம் அடைந்ததும் அந்தக் குஞ்சுகள் பறந்து செல்லும். தகுதியான இடத்தில் தங்கும். வாழ்வைத் தொடங்கும். இது புதுக்குடியேற்றம்.



முனைவர் மலையமான்

**சில தமிழ்ச் சொற்கள் பல இந்திய மொழிகளிலும் திரிபடைந்த நிலையில் வாழ்ந்து கொண்டுள்ளன. வடமொழியில் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்றார் கால்டுவெல். பர்ரோ, எமனோ ஆகிய அறிஞர்களும், மயிலை சீனி வேங்கடசாமி போன்றோரும் அம்மொழியில் கலந்துள்ள தமிழ்ச் சொற்களை எடுத்துக்காட்டினார்கள்.**

... இது வியப்பைத் தருகிறது; தமிழுக்கு உயர்வும் வருகிறது; என்றும் தமிழ் வாழும் என்ற நம்பிக்கையும் வளர்கிறது.

கட்டுரையாளர்:
**முன்னாள் பதிப்பாசிரியர், தமிழ்வளர்ச்சி இயக்கம்.**

# பாம்புக்கு பால் வார்க்காதீர்கள்!

இந்தியாவுக்கு வெளியே ஆங்காங்கே தலைகாட்டத் தொடங்கி இருக்கும் காலிஸ்தான் தீவிரவாதம் கவலையளிக்கிறது. அவர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடத் தொடங்கவில்லை என்றாலும், அந்நிய நாடுகளில் அதற்கான முன்னெடுப்புகளைச் செய்து வருகிறார்கள் என்பதை அவர்களது செய்கைகள் வெளிச்சம் போடுகின்றன.

அமெரிக்காவின் சான்ஃபிரான்சிஸ்கோ இந்தியத் தூதரகத்தின் மீது நடத்திய தாக்குதலும், கனடாவில் ஆங்காங்கே இந்தியாவுக்கு எதிராக ஒட்டப்படும் சுவரொட்டிகளும் காலிஸ்தான் அமைப்புகள் மீண்டும் வலுப்பெறுகின்றன என்பதற்கான அடையாளங்கள். கடந்த மூன்று மாதங்களில், காலிஸ்தான் கோரிக்கையை முன்வைக்கும் முக்கியமான தலைவர்கள் மூவர் உயிரிழந்திருக்கிறார்கள்.

அஸ்ஸாம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் அம்ருத்பால் சிங்கின் குருநாதர் என்று கருதப்படும் அவ்தார் சிங் கண்டா, பிரிட்டன் பர்மிங்ஹாமிலுள்ள மருத்துவமனையில் உயிரிழந்திருக்கிறார்; கனடாவின் சர்ரேயிலுள்ள குருநானக் சீக்கிய குருத்வாரா வாசலில் காலிஸ்தான் புலிகள் படைத் தலைவர் ஹர்தீப்சிங் நிஜ்ஜார் இரண்டு இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்; பாகிஸ்தான் லாகூரில், காலிஸ்தான் கமாண்டோ படைத் தலைவர் பரம்ஜித் சிங் பஞ்ச்வார், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஜெர்மனியில் இருந்து இயங்கும் 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' படையின் தலைவர் குர்மித் சிங் பக்கா, அமெரிக்காவில் இருந்து செயல்படும் 'நீதி கேட்டு சீக்கியர்கள்' அமைப்பின் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னூன், பிரிட்டனில் பர்மிங்ஹாமிலிருந்து செயல்படும் காலிஸ்தான் புலிகள் படைத் தலைவர் பரம்ஜித் சிங் பம்மா ஆகிய மூவரும்தான் காலிஸ்தான் தீவிரவாதத்தை முன்னின்று நடத்தும் தலைவர்களாகத் தொடர்கிறார்கள்.

இப்போது திடீரென்று தீவிரமடைந்திருக்கும் காலிஸ்தான் அமைப்புகளின் பின்னால் பாகிஸ்தான் இருக்கிறது என்பதற்குப் பல காரணங்களும், சான்றுகளும் இருக்கின்றன. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி கனடாவில் பிரிட்டன் கொலம்பிய மாகாணத்தின் சர்ரே பகுதியிலுள்ள குருநானக் சீக்கிய குருத்வாராவுக்கு வான்கூவரிலுள்ள பாகிஸ்தான் தூதர் ஜன்பாஸ் கான் நேரில் விஜயம் செய்தார். பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் திடீர் வெள்ளப் பெருக்கு சேத நிவாரண நிதி திரட்டுவதற்கு அவர் சென்றதாக அதிகாரபூர்வ செய்திக் குறிப்பு தெரிவித்தது.

தூதர் ஜன்பாஸ் கான் எவ்வளவு நிதி திரட்டினார் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், தூதரகத்தின் ஏனைய இரண்டு அதிகாரிகளுடன் அந்த இரண்டு குருத்வாராக்களிலும் அவர் தனித்தனியாக காலிஸ்தான் பிரிவினைவாத இனங்களைச் சேர்ந்த தலைவர்களை ரகசியமாக சந்தித்தார் என்பது மட்டும் தெரியும். அமெரிக்க எல்லையையொட்டிய கனடாவின் பகுதியான சர்ரே, சீக்கியர்கள் மிக அதிகமாகக் குடியேறி வாழும் பகுதிகளில் ஒன்று.

அடுத்த சில மாதங்களில், கனடாவில் ஒன்றன்பின் ஒன்றாக இந்தியாவுக்கு எதிரான தாக்குதல்கள் நடைபெறத் தொடங்கின. ஜனவரி 31 அன்று பிராம்ப்டனில் உள்ள கௌரி சங்கர் கோயில் தாக்கப்பட்டது; பிப்ரவரி 17-ஆம் தேதி மிஸ்ஸிஸௌகா ராமர் கோயிலில் இந்தியாவுக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன; மார்ச் 23-இல் ஒட்டாவா இந்திய தூதரகத்தின் மீது இரண்டு கையெறி குண்டுகள் வீசப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து, கடந்த ஆறு மாதங்களாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் காலிஸ்தான் பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இந்தியாவுக்கு எதிரான காலிஸ்தான் பிரிவினைவாதிகளின் செயல்பாடுகளை, 'கருத்து சுதந்திரம்' என்கிற பெயரில் கனடாவும், ஏனைய நாடுகளும் அனுமதித்து வருவதை நாம் வேடிக்கை பார்க்க முடியாது. பிந்தரன் வாலேவுக்கு எதிராக அமிருதசரஸ் பொற்கோயிலில் நடத்தப்பட்ட 1984 'ஆபரேஷன் ப்ளு ஸ்டார்' நடவடிக்கைக்கு பதிலடியாக, 1985-இல் ஏர் இந்தியா விமானம் கனிஷ்கா காலிஸ்தானியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் பயணித்த 329 பேரும் இந்திய வம்சாவளியினரான கனடா பிரஜைகள். இன்னும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவோ, தண்டிக்கப்படவோ இல்லை.

இந்திய குடிமக்களுக்கு எதிராகவும், இந்திய தூதரக அதிகாரிகளுக்கு எதிராகவும் பிரிவினைவாதிகள் நடத்த முற்பட்டிருக்கும் பிரசாரங்களும், அச்சுறுத்தல்களும் சட்டப்படி தடுக்கப்படாவிட்டால், நிலைமை கைமீறக்கூடும் என்கிற இந்திய அரசின் எச்சரிக்கையை அந்த நாடுகள் அசிரத்தையாகக் கடந்துபோகக் கூடாது. இந்தியத் தூதரகங்களின் மீது தாக்குதல் நடத்துவது மட்டுமல்லாமல், அதிகாரிகளின் படங்களுடன் எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்படுவது கண்டனத்துக்குரியது மட்டுமல்ல, உடனடி நடவடிக்கைக்கும் உரியது.

சான்பிரான்சிஸ்கோ தூதரகத் தாக்குதலை அமெரிக்க அரசு வன்மையாகக் கண்டித்து, தூதரகத்துக்கும் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதை உறுதிப்படுத்தி இருக்கிறது. சற்று தாமதமாக கனடா அரசும் காலிஸ்தானியர்களின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது. 'காலிஸ்தான் விடுதலைப் பேரணி' என்கிற பெயரில் வெளிநாடு வாழ் சீக்கியர்களை இந்தியாவுக்கு எதிராக அணி திரட்டும் முயற்சிகளுக்கும் தடை விதிக்க அந்நாட்டு அரசுகள் முன்வர வேண்டும்.

சிறுபான்மை சீக்கியர்களின் வாக்குவங்கியைக் கருத்தில் கொண்டு இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாத, தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகளின் செயல்பாடுகளை அனுமதிப்பது என்பது பாம்புக்குப் பால் வார்க்கும் கதையாக முடியும் என்பதை அந்த நாடுகள் உணர வேண்டும்.

# ஜிஎஸ்டி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் அமைக்க ஒப்புதல்

**புது தில்லி, ஜூலை 11:** ஜிஎஸ்டி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் அமைக்க ஜிஎஸ்டி கவுன்சிலின் 50-ஆவது கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஜிஎஸ்டி கவுன்சிலின் கூட்டம் தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் மாநில நிதியமைச்சர்கள், மத்திய நிதியமைச்சக உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜிஎஸ்டி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களை அமைக்க கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. முதல்கட்டமாக, மாநிலத் தலைநகரங்களில் அந்தத் தீர்ப்பாயங்கள் அமைக்கப்படும். பின்னர், படிப்படியாக மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

எம்யுவி வகை கார்களுக்கு 22 சதவீத ஜிஎஸ்டி விதிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், 'செடான்' வகை கார்களுக்கு அதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி தகவல்-தொழில்நுட்ப அமைப்பில் சீர்திருத்தங்களைப் புகுத்துவது தொடர்பாகவும் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது.

**ஜிஎஸ்டி விலக்கு:** தனிநபரால் இறக்குமதி செய்யப்படும் 'டைனடக்சிமேப்' புற்றுநோய் சிகிச்சை மருந்துக்கு ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரிய நோய்களுக்கான சிகிச்சையில் பயன்படுத்தப்படும் சிறப்பு உணவுகளுக்கும் ஜிஎஸ்டி விலக்களிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் வழங்கும் செயற்கைக்கோள் ஏவுதல் சேவைகளுக்கும் ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சாலைக் கட்டுமானம் உள்ளிட்டவற்றில் பயன்படுத்தப்படும் எல்டி ஸ்லாக், மீன்வளர்ப்பில் பயன்படுத்தப்படும் கரையக்கூடிய பசை ஆகியவற்றின் மீதான ஜிஎஸ்டி 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நூல் மீதான ஜிஎஸ்டி 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றார்.



தில்லியில் 50-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் சிறப்பு அஞ்சல் தலையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் வழங்கிய தில்லி வட்டத்தின் தலைமை தபால் துறைத் தலைவர் மஞ்சு குமார்.

## அமலாக்கத் துறை வரம்பில் ஜிஎஸ்டி: எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) முறையை சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை சட்ட (பிஎம்எல்ஏ) வரம்புக்குள் கொண்டு வந்துள்ளதற்கு ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்தன.

ஜிஎஸ்டி முறையை சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வருவது தொடர்பாக மத்திய அரசு அண்மையில் அறிவிக்கை வெளியிட்டது.

அதன்படி, தொழில் நிறுவனங்கள் மீது ஜிஎஸ்டி சார்ந்த சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை குற்றச்சாட்டு எழுந்தால், அது தொடர்பாக அமலாக்கத் துறையானது சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனத்திடம் விசாரணை நடத்த முடியும். இது தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும் எனப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்தது. ஜிஎஸ்டி முறையை அமலாக்கத் துறையின் வரம்புக்குள் கொண்டு வந்ததற்கு தில்லி, பஞ்சாப், மேற்கு வங்கம், ஹிமாசல், கர்நாடகம், தமிழகம், சத்தீஸ்கர், தெலங்கானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

மத்திய அரசின் இந்த நடவடிக்கையானது 'வரி பயங்கரவாதத்துக்கு' வழிவகுத்து, சிறு தொழில் நிறுவனங்களை அதிகமாகப் பாதிக்கும் என பஞ்சாப் நிதியமைச்சர் ஹர்பால் சிங் சீமா குற்றஞ்சாட்டினார். ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் செய்வதில் சில நிறுவனங்கள் காலதாமதம் செய்தாலே, அது தொடர்பாக அமலாக்கத் துறை இனி விசாரணை நடத்தும் என தில்லி நிதியமைச்சர் அதிஷி செய்தியாளர்களிடம் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர்களை அமலாக்கத் துறை முறையின்றி விசாரிப்பதைப் போல, தொழில் நிறுவனங்களின் தலைவர்களிடமும் இனி விசாரணை நடத்தும் என அவர் குற்றஞ்சாட்டினார்.

## சிறப்பு அஞ்சல் தலை, உறை வெளியீடு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூலை 11:** சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சிலின் 50- ஆவது கூட்டத்தையொட்டி, சிறப்பு அஞ்சல் தலையையும் சிறப்பு உறையையும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டார்.

ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் 50-ஆவது ஜிஎஸ்டியின் சிறப்பு அஞ்சல் தலையையும், சிறப்பு உறையையும் தில்லி வட்டத்தின் தலைமை தபால் துறைத் தலைவர் மஞ்சு குமார், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் வழங்கினார். இதை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் ஜிஎஸ்டி கவுன்சில் உறுப்பு மாநில நிதியமைச்சர்கள், வருவாய்த் துறை செயலர் சஞ்சய் மல்ஹோத்ரா, மத்திய மறைமுக வரி மற்றும் சுலால் வரி வாரியத் தலைவர் விவேக் ஜோரி மற்றும் வாரிய உறுப்பினர்கள், ஜிஎஸ்டி கவுன்சில் அதிகாரிகள் கலந்துகொண்டனர். நிதியமைச்சர் வெளியிட்ட இந்த ரூ.5 சிறப்பு அஞ்சல் தலை தனிப் பயனாக்கப்பட்ட 'எனது அஞ்சல் தலை' (மை ஸ்டாம்ப்) ஆகும். ஜிஎஸ்டி கவுன்சிலால் வடிவமைக்கப்பட்டு, இந்திய அஞ்சல் துறை மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சிறப்பு அஞ்சல் உறையில் ஜிஎஸ்டி தொடங்கப்பட்டதை நினைவுபடுத்தும் புகைப்படம் இடம் பெற்றுள்ளது.

கடந்த 2017, ஜூலை 1-ஆம் தேதி நாட்டின் மறைமுக வரியில் மிகப்பெரிய மாற்றம் கொண்டுவரப்பட்டு ஜிஎஸ்டி வரி அறிமுகப்படுத்தப்பட்டது.

அப்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியும், பிரதமர் நரேந்திர மோடியும் ஜிஎஸ்டியை அன்றைய தினம் நள்ளிரவில் நாடாளுமன்றத்தின் மைய அவையில் மணி அடித்து தொடங்கிவைத்தனர். இந்த சரித்திர பூர்வ நிகழ்வை நினைவுகூரும் புகைப்படம் அஞ்சல் உறையில் இடம் பெற்றுள்ளது.

## உள்ளாட்சிகளில் சேவைகளுக்கான வரிவிலக்கு ரத்து செய்ய தமிழகம் எதிர்ப்பு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூலை 11:** ஊராட்சி, நகராட்சி அமைப்புகளில் சரக்கு இல்லாத சேவைகளுக்கான வரிவிலக்கை ரத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்ப்புத் தெரிவித்தார்.



கூட்டத்தில் அவர் பேசியதாவது: ஊராட்சி, நகராட்சி அமைப்புகளில் மனிதவளம் (தனியார் ஒப்பந்தப் பணியாளர்கள்), பராமரிப்புப் பணிகள் தொடர்பான சேவைகளை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மத்திய - மாநில அரசுகள் பெறும்போது, தற்போது ஜிஎஸ்டி சட்டத்தின் (அரசியல் சாசனத்துக்குட்பட்டு) கீழ் வரிவிலக்கு உள்ளது.

இதுபோன்ற வரிவிலக்கு பட்டியல்களை மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தால் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தமிழக அரசுக்கும் கூடுதல் நிதிச்சுமை ஏற்படும். இதை முற்றிலுமாக கைவிட வேண்டும்.

இணையதள விளையாட்டுகளுக்கான ஜிஎஸ்டி வரி விதிக்கப்படும்போது, தமிழக அரசின் இணையதள சூதாட்ட தடை மற்றும் இணைய விளையாட்டு முறைப்படுத்துதல் சட்டத்துக்கு இணக்கமாக இருக்க வேண்டும்.

புற்றுநோய்க்கான விலை உயர்ந்த மருந்துகளை தனிநபர் பயன்பாட்டுக்கு இறக்குமதி செய்யும்போதும், குறிப்பிட்ட அரிய வகை நோய்களுக்கான மருந்துகள் மற்றும் உணவுகளை தனிநபர் பயன்பாட்டுக்கு இறக்குமதி செய்யும்போதும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வரி விலக்குக்கான பரிந்துரைகளுக்கும் தமிழகம் ஆதரவு தெரிவிக்கிறது என்றார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

தமிழக நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயசந்திரன், வணிக வரித் துறைச் செயலர் தீரஜ் குமார், வணிக வரித் துறை இணை ஆணையர் சுபாஷ் உள்ளிட்டோரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சந்திரயான்-3: செயல் திட்ட ஒத்திகை நிறைவு

**சென்னை, ஜூலை 11:** சந்திரயான் -3 விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான செயல் திட்ட ஒத்திகையை இஸ்ரோ நிறைவு செய்துள்ளது. அதற்கு அடுத்தகட்டமாக கவுன்ட் டவுன் தொடங்கும் பணிகளும், எரிபொருள் நிரப்பும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்த விண்கலம் எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆய்வு மையத்தின் இரண்டாம் ஏவுதளத்தில் இருந்து ஜூலை 14-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.35 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.



ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து 'சந்திரயான்-3 விண்கலத்தை விண்ணில் செலுத்த தயார் நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள 'எல்விஎம்-3 ராக்கெட்.

இதற்கான இறுதிக்கட்ட பணிகளில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையே சந்திரயான்-3 விண்கலத்தை ஏவுவதற்கான செயல் திட்ட ஒத்திகை செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. அந்த ஒத்திகை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும், விண்ணில் சந்திரயான் - 3 விண்கலத்தை செலுத்துவதற்கான கடைசி நிலையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சந்திரயான்-3 விண்கலம் மொத்தம் 3,900 கிலோ எடை கொண்டது. இதில் 7 விதமான ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. சந்திரயான் -2 விண்கலத்தின் மூலம் அனுப்பப்பட்ட ஆர்பிட்டர் ஏற்கெனவே நிலவை சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர், ரோவர் கலன்கள் மட்டும் அனுப்பப்படுகின்றன.

லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் 14 நாள்களுக்கு நிலவில் ஆய்வு மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.